# <u>தமிழ்நாடு அரசு</u>

# <u>இந்து சமய அறநிலையத்துறை, சென்னை–34.</u>

## <u>2022 – 2023 மானசரோவர் / முக்திநாத் யாத்திரை – அறிவிப்பு</u>

சீனாவில் உள்ள மானசரோவர் மற்றும் நேபாளத்தில் உள்ள முக்திநாத் ஆகிய திருத்தலங்களுக்கு புனித யாத்திரை மேற்கொண்டு முழுமையாக பயணம் முடித்து திரும்பிய, **தமிழ்நாட்டை சேர்ந்த இந்து மதத்தை சார்ந்தவர்களுக்கு மட்டும்**, தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறை சார்பில் மானியம் வழங்கும் திட்டத்தின்படி, பின்வரும் நிபந்தனைகள் மற்றும் நெறிமுறைகளுக்கு உட்பட்டு 2022–2023 ஆம் நிதியாண்டில் (01.04.2022 முதல் 31.03.2023 முடிய) புனித யாத்திரை முடித்த யாத்ரீகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 30.04.2023 **ஆம் தேதிக்குள்** வரவேற்கப்படுகின்றன.

**<u>மானசரோவர் / முக்திநாத் யாத்திரை பயனாளிகளைத் தேர்வு செய்யும் முறை, மானியம் பெறுவதற்கான தகுதிகள் / நிபந்தனைகள் மற்றும் விண்ணப்பங்களை பூர்த்தி செய்து அனுப்புவதற்கான வழிமுறைகள்</u>** :–

1. 01.04.2022 **முதல்** 31.03.2023 முடியவுள்ள காலத்தில் **மானசரோவர் / முக்திநாத்** புனித யாத்திரை மேற்கொண்டு முழுமையாக பயணம் முடித்து திரும்பிய, **தமிழ்நாட்டை சேர்ந்த, இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள்** மட்டுமே விண்ணப்பிக்க தகுதியானவர்கள்.

2. **விண்ணப்பதாரர் 18 வயதுக்கு மேற்பட்டவராகவும், 70 வயதிற்குட்பட்டவராகவும்** இருத்தல் வேண்டும்.

3. விண்ணப்பதாரர்கள் இத்துறை இணையதளமான https://hrce.tn.gov.in/ல் பதிவேற்றப்பட்டுள்ள உறுதிமொழியுடன் கூடிய விண்ணப்ப **படிவங்களை**

**மட்டுமே பதிவிறக்கம் செய்து பயன்படுத்த வேண்டும்.** இதர படிவங்களில் விண்ணப்பித்தால் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

4. விண்ணப்ப படிவத்தில் அனைத்து விவரங்களையும் எழுத்தால் முழுமையாக பூர்த்தி செய்து, **'இந்து' மதத்தைச் சார்ந்தவர் என்பதற்கான பள்ளி / கல்லூரி / வட்டாட்சியர் சான்று உள்ளிட்ட, விண்ணப்ப படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து சான்றுகளையும்** இணைத்து அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

5. விண்ணப்பதாரர்கள் மானசரோவர் / முக்திநாத் புனித யாத்திரை முழுமையாக முடித்து திரும்பியதற்கு ஆதாரமாக வரிசை எண்.7–ல் குறிப்பிட்டுள்ள அனைத்து சான்றுகளுடன், ஒவ்வொரு யாத்திரைக்கும் தனித்தனியாக, அதற்கான விண்ணப்ப படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும். ஒருங்கிணைந்த விண்ணப்பங்கள், வரிசை எண்.7–ல் குறிப்பிட்டுள்ள சான்றுகள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் மற்றும் 30.04.2023 **ஆம் தேதிக்குள்** பெறப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

6. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வரிசை எண்.7–ல் குறிப்பிட்டுள்ள இணைப்புகளுடன் **"ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை, எண்.119, உத்தமர் காந்தி சாலை, நுங்கம்பாக்கம், சென்னை – 600034"** என்ற முகவரிக்கு 30.04.2023 **ஆம் தேதிக்குள்** கிடைக்குமாறு அனுப்ப வேண்டும்.

7. **யாத்திரை முடித்ததற்கு ஆதாரமாக கீழ்க்காணும் சான்றுகள் / இணைப்புகளை விண்ணப்ப படிவத்துடன் கண்டிப்பாக இணைத்து விண்ணப்பிக்க வேண்டும்.**

   (i) விண்ணப்பதாரர் இந்து மதத்தை சார்ந்தவர் என்பதற்கான சான்று **(பள்ளி / கல்லூரி சான்றிதழ்கள் / தொடர்புடைய வட்டாட்சியர் சான்று)**

   (ii) பிறந்த தேதிக்கான சான்று (**பள்ளி / கல்லூரி / பிறப்புச் சான்று /** கடவுச்சீட்டு)

(iii) தமிழகத்தைச் சேர்ந்தவர் என்பதற்கான இருப்பிட சான்று (**குடும்ப அட்டை அல்லது வட்டாட்சியர் வழங்கும் இருப்பிட / பிறப்பிடச் சான்று** )

(iv) கடவுச்சீட்டு நகல் மற்றும் யாத்திரையின் போது சீனா / நேபாள நாட்டின் குடியேற்று முத்திரைகள் Immigration stampings பதிக்கப்பட்ட பக்கங்களின் நகல்கள்.

(v) சீன நாட்டின் விசா நகல் **(Full pages of Invitation Letter & Group Visa)**

(vi) நேபாள் நாட்டில் பயணித்த ஆதாரங்கள் – **KATHMANDU, SIMIKOT, NEPALGUNJ, POKHARA, JOMSOM** etc.ஆகிய இடங்களுக்கு பயணித்த விமான பயணச்சீட்டுகள் மற்றும் Boarding Passes / நேபாள் நுழைவு அனுமதிச் சீட்டு Nepal Entry permit /Trekkers Registration Card முதலானவை.

(vii) இருப்பிடத்திலிருந்து யாத்திரை சென்று மீண்டும் இருப்பிடம் திரும்பிய வரை பயணித்த அனைத்து பயணச்சீட்டுகள் – பேருந்து / ரயில் / விமானம் பயணச்சீட்டுகள் மற்றும் அனைத்து விமான பயணங்களுக்கான Boarding Passes including KATHMANDU, SIMIKOT, NEPALGUNJ, POKHARA, JOMSOM etc.

(viii) யாத்திரை பயண திட்டம்

(ix) யாத்திரை நிறைவுச் சான்றிதழ்

(x) வருமானச் சான்று (**தொடர்புடைய வட்டாட்சியர் சான்று** )

(xi) ஆதார் அட்டை நகல்

(xii) விண்ணப்பதாரரின் வங்கி சேமிப்பு கணக்கு புத்தக முதல் பக்க நகல் (விண்ணப்பதாரர் பெயர், முகவரி, கணக்கு எண், வங்கியின் பெயர், கிளை பெயர் மற்றும் முகவரி, IFSC Code எண், MICR Code எண் விவரங்களுடன்)

(xiii) 3 புகைப்படங்கள்.

8. **விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ளவாறு உரிய சான்றுகளை வரிசைப்படி இணைத்து, அவற்றிற்கு பக்க எண்ணிட்டு, அதன் விவரத்தை விண்ணப் படிவத்தில் குறிப்பிட வேண்டும்**

9. மானசரோவர் / முக்திநாத் புனித யாத்திரைக்கான நிதியுதவி, தமிழ்நாட்டை சேர்ந்த இந்து மதத்தை சார்ந்த, 01.04.2022 முதல் 31.03.2023 முடிய

யாத்திரையை தமிழ்நாட்டில் தமது இருப்பிடத்திலிருந்து புறப்பட்டு, முழுமையாக முடித்து திரும்பி விண்ணப்பிக்கும், தகுதி வாய்ந்த மானசரோவர் யாத்ரீகர்கள் 500 நபர்களுக்கு மட்டும் தலா ரூ.40,000/– வீதமும் மற்றும் தகுதி வாய்ந்த முக்திநாத் யாத்ரீகர்கள் 500 நபர்களுக்கு மட்டும் தலா ரூ.10,000/– வீதமும் மானியம் வழங்கப்படும்.

10. அரசால் நியமிக்கப்பட்ட தேர்வுக் குழுவினரால் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு, ஒவ்வொரு யாத்திரைக்கும் தகுதி வாய்ந்த 500 பயனாளிகள் தேர்வு செய்யப்படுவர். தகுதி வாய்ந்த பயனாளிகள் 500–க்கு மேல் இருப்பின், பயனாளிகளின் ஆண்டு வருமானத்தின் அடிப்படையில் குறைந்த வருமானம் கொண்டவர்களிடமிருந்து ஏறுமுகத்தில் (Ascending Order) முதல் 500 பயனாளிகள் தேர்வு செய்யப்படுவர்.

11. **தேர்வுக் குழுவின் முடிவே இறுதியானதாகும்.**

12. தேர்வு செய்யப்பட்ட தகுதி வாய்ந்த பயனாளிகளுக்கு மட்டும் அவர்களின் பெயருக்கு கேட்பு வரைவோலையாக / மின்னனு தீர்வக முறை ECS மூலம் மானியம் அனுப்பி வைக்கப்படும். எனவே விண்ணப்பதாரர்கள் பெயர் மற்றும் இதர விவரங்களுடன் கூடிய சேமிப்பு வங்கி கணக்கு புத்தகத்தின் பக்க நகலுடன் அனுப்பி வைக்க வேண்டும்.

13. யாத்ரீகர் தமது ஆயுட்காலத்தில் எத்தனை முறை மானசரோவர் / முக்திநாத் யாத்திரை மேற்கொண்டாலும், **இத்திட்டத்தின் படி தமது வாழ்நாளில் ஒருமுறை மட்டுமே மானியம் பெற தகுதியானவர்.** இத்திட்டத்தின் கீழ் ஏற்கனவே மானியம் பெற்ற ஒருவர் மீண்டும் மானியம் கோரி விண்ணப்பிக்கலாகாது. அவ்வாறு விண்ணப்பித்தால் அவரது விண்ணப்பம்

நிராகரிக்கப்படுவதுடன், **விண்ணப்பதாரர் மீது குற்றவியல் நடவடிக்கையும் தொடரப்படும்.**

**மானசரோவர் மற்றும் முக்திநாத் யாத்திரைக்கு மானியம் கோருவதற்கான விண்ணப்ப படிவங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.**

**ஆணையர்.**

பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஒட்ட வேண்டும்

2022 – 2023 ஆம் நிதியாண்டில் (01.04.2022 முதல் 31.03.2023 வரை )

## மானசரோவர் யாத்திரைக்கான அரசு மானியம் கோரும் விண்ணப்பப் படிவம்

**(விண்ணப்பப் படிவம் விடுதலின்றி முழுமையாக பூர்த்தி செய்யப்பட வேண்டும்)**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | விண்ணப்பதாரர் பெயர் | : | | |
| 2. | தகப்பனார் / கணவர் பெயர் | : | | |
| 3. | **இருப்பிட முகவரி** (தற்போது வசித்து வரும் இருப்பிட முகவரியை முழுமையாக குறிப்பிடவும் மற்றும் அதற்கு சான்றாக குடும்ப அட்டை / தொடர்புடைய வட்டாட்சியர் வழங்கும் பிறப்பிட / இருப்பிட சான்று நகல் இணைக்கவும்) | : | | |
| 4. | பிறந்த தேதி & வயது (18 முதல் 70 வயது வரை மட்டுமே ) | : | வயது : | |
| 5. | ஆதார் எண். | | | |
| 6. | யாத்திரை விவரம் | : | மானசரோவர் | |
| 7. | யாத்திரை தொடங்கிய நாள் | : | | |
| 8. | யாத்திரை முடித்த நாள் | : | | |
| 9. | கடந்த ஆண்டுகளில் மானசரோவர் யாத்திரை சென்று தமிழக அரசு மானியம் பெறப்பட்டுள்ளதா? | : | ஆம் / இல்லை | |
| | **மானசரோவர் விண்ணப்பத்துடன் தவறாமல் இணைக்கப்பட வேண்டிய சான்றுகள் / ஆவணங்கள்** | | **இணைக்கப்பட்ட சான்றின் விவரம்** | **விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள பக்கம் எண்** |
| 10. | இந்து மதத்தை சார்ந்தவர் என்பதற்கான சான்றிதழ் (பள்ளி / கல்லூரிச் சான்றிதழ் / தொடர்புடைய வட்டாட்சியர் சான்று ) | : | | |
| 11. | பிறந்த தேதிக்கான சான்று (பள்ளி / கல்லூரி / பிறப்புச் சான்று / கடவுச்சீட்டு நகல்) | : | | |
| 12. | இருப்பிட முகவரிக்கான சான்று – ( குடும்ப அட்டை / தொடர்புடைய வட்டாட்சியர் பிறப்பிட / இருப்பிட சான்று ) | : | | |
| 13. | ஆதார் அட்டை நகல் | | | |
| 14. | a) கடவுச்சீட்டு (Passport) நகல் | : | | |
| | b) கடவுச்சீட்டில் இந்திய / சீன / நேபாள நாட்டின் குடியேற்று முத்திரைகள் (Immigration stamp) பதிக்கப்பட்ட பக்க நகல் | | | |
| 15. | சீன விசா நகல் (Invitation Letter & Group Visa–all pages) | : | | |
| 16. | a) முழுமையான பயணச்சீட்டுகள் – பேருந்து / ரயில் / விமானம் | : | | |
| | b) அனைத்து விமான பயணங்களுக்கான Boarding Passes including KATHMANDU, SIMIKOT, NEPALGUNJ, POKHARA, JOMSOM | | | |
| | c) Trekkers Registration Card / Nepal Entry Permit | | | |
| 17. | யாத்திரை பயண திட்டம் – Tour Program / Itinerary | | | |
| 18. | யாத்திரை நிறைவுச் சான்றிதழ் (Yatra Completion certificate) | : | | |
| 19. | விண்ணப்பதாரர் வங்கி சேமிப்பு கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல் | : | | |
| 20. | வருமான சான்றிதழ் (தொடர்புடைய வட்டாட்சியர் சான்று இணைக்கவும் ) ஆண்டு வருமானம் ரூ. /- | | | |
| 21. | பாஸ்போர்ட் சைஸ் போட்டோ – 2 | | | |
| 22. | கைப்பேசி எண். | : | | |

**உறுதி மொழி**

இவ்விண்ணப்பத்தில் என்னால் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்கள் மற்றும் அது தொடர்பாக நான் இணைத்துள்ள சான்றுகள் யாவும் உண்மை எனவும், இதற்கு முன் தமிழக அரசிடமிருந்து நான் மானசரோவர் யாத்திரைக்கான மானியம் பெறவில்லை என்றும் உறுதியளிக்கிறேன். ஏற்கனவே நான் மானியம் பெற்றது உறுதி செய்யப்பட்டால், என் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறிவேன்.

நாள்:–

விண்ணப்பதாரர் கையொப்பம்.

பாஸ்போர்ட்
அளவு புகைப்படம்
ஒட்ட வேண்டும்

2022 – 2023 ஆம் நிதியாண்டில் (01.04.2022 முதல் 31.03.2023 வரை )

## முக்திநாத் யாத்திரைக்கான அரசு மானியம் கோரும் விண்ணப்பப் படிவம்

**(விண்ணப்பப் படிவம் விடுதலின்றி முழுமையாக பூர்த்தி செய்யப்பட வேண்டும்)**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | விண்ணப்பதாரர் பெயர் | : | | |
| 2. | தகப்பனார் / கணவர் பெயர் | : | | |
| 3. | **இருப்பிட முகவரி**(தற்போது வசித்து வரும் இருப்பிட முகவரியை முழுமையாக குறிப்பிடவும் மற்றும் அதற்கு சான்றாக **குடும்ப அட்டை / தொடர்புடைய வட்டாட்சியர் வழங்கும் பிறப்பிட / இருப்பிட சான்று** நகல் இணைக்கவும்) | : | | |
| 4. | பிறந்த தேதி & வயது (**18 முதல் 70 வயது வரை மட்டுமே** ) | : | வயது : | |
| 5. | ஆதார் எண். | | | |
| 6. | யாத்திரை விவரம் | : | முக்திநாத் | |
| 7. | யாத்திரை தொடங்கிய நாள் | : | | |
| 8. | யாத்திரை முடித்த நாள் | : | | |
| 9. | கடந்த ஆண்டுகளில் **முக்திநாத்** யாத்திரை சென்று தமிழக அரசு மானியம் பெறப்பட்டுள்ளதா? | : | ஆம் / இல்லை | |
| **முக்திநாத் விண்ணப்பத்துடன் தவறாமல் இணைக்கப்பட வேண்டிய சான்றுகள் / ஆவணங்கள்** | | | **இணைக்கப்பட்ட சான்றின் விவரம்** | **விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள பக்கம் எண்** |
| 10. | இந்து மதத்தை சார்ந்தவர் என்பதற்கான சான்றிதழ்<br>**(பள்ளி / கல்லூரிச் சான்றிதழ் / தொடர்புடைய வட்டாட்சியர் சான்று )** | : | | |
| 11. | பிறந்த தேதிக்கான சான்று<br>**(பள்ளி / கல்லூரி / பிறப்புச் சான்று / கடவுச்சீட்டு நகல்)** | : | | |
| 12. | இருப்பிட முகவரிக்கான சான்று – ( **குடும்ப அட்டை / தொடர்புடைய வட்டாட்சியர் பிறப்பிட / இருப்பிட சான்று** ) | : | | |
| 13. | ஆதார் அட்டை நகல் | | | |
| 14. | a) கடவுச்சீட்டு (Passport) நகல் | : | | |
| | b) கடவுச்சீட்டில் **இந்திய / நேபாள** நாட்டின் குடியேற்று முத்திரைகள் (Immigration stamp) பதிக்கப்பட்ட பக்க நகல் | | | |
| 15. | a) முழுமையான பயணச்சீட்டுகள் – பேருந்து / ரயில் / விமானம் | : | | |
| | b) அனைத்து விமான பயணங்களுக்கான Boarding Passes including KATHMANDU, SIMIKOT, NEPALGUNJ, POKHARA, JOMSOM | | | |
| | c) Trekkers Registration Card / Nepal Entry Permit | | | |
| 16. | யாத்திரை பயண திட்டம் – Tour Program / Itinerary | | | |
| 17. | யாத்திரை நிறைவுச் சான்றிதழ் (Yatra Completion certificate) | : | | |
| 18. | விண்ணப்பதாரர் வங்கி சேமிப்பு கணக்கு புத்தகத்தின் முதல் பக்கம் | : | | |
| 19. | வருமான சான்றிதழ் (**தொடர்புடைய வட்டாட்சியர் சான்று இணைக்கவும் ) ஆண்டு வருமானம் ரூ. /–** | | | |
| 20. | பாஸ்போர்ட் சைஸ் போட்டோ – 2 | | | |
| 21. | கைப்பேசி எண். | : | | |

**உறுதி மொழி**

இவ்விண்ணப்பத்தில் என்னால் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்கள் மற்றும் அது தொடர்பாக நான் இணைத்துள்ள சான்றுகள் யாவும் உண்மை எனவும், இதற்கு முன் தமிழக அரசிடமிருந்து நான் முக்திநாத் யாத்திரைக்கான மானியம் பெறவில்லை என்றும் உறுதியளிக்கிறேன். ஏற்கனவே நான் மானியம் பெற்றது உறுதி செய்யப்பட்டால், என் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறிவேன்.

நாள்:–

விண்ணப்பதாரர் கையொப்பம்.